நத்தார் வாழ்த்துக்கள்

**நற்கருணைப் பாடல்.**

4

ஒளியான என் தெய்வமே – நல்
வழி காட்டும் மணி தீபமே – என்
உள்ளம் எழுந்து வா – என்
இல்லம் நிறைய வா – ஒளியான என் தெய்வமே

என் உள்ளம் நிலமானது – அதில்
உன் வார்த்தை விதையானது – ஆ.. ஆ
சில மட்டும் பயிரானது – அதில்
சில மட்டும் பயிரானது – அது
காயாகி கனியானது – ஒளியான என் தெய்வமே

இருள் நீக்கும் ஒளியானவர் – வாழ்வில்
அருள் சேர்க்கும் வழியாகவா – ஆ.. ஆ
தெய்வீக உணவாகவா – என்
தெய்வீக உணவாகவா – என்றும்
மாறாத என் மன்னவா – ஒளியான என் தெய்வமே

**நத்தார்ப் பாடல்.**

5

மனோ மகிழ்வோடே
அனைவரும் வாரும்
வாரும் வாரும் பெத்லேகம் ஊருக்கு
பாருங்கள் தேவதூதனின் ராசாவை

வாரும் வணங்குவோமே
வாரும் வணங்குமே
வாரும் வணங்குமே பாலனை

ஆதி பிதாவின்
அநாதிச்சுடரை
மனித வடிவமாய் காண்கின்றோம்
துணிகளாலே சுற்றிய பாலனை – வாரும் வணங்குவோமே

மந்தையை விட்டேதான்
மாட்டுத்தொட்டிலை நோக்கி
வந்து இடையர்கள் வணங்கினார்கள்
சந்தோஷமாக நாமும் போவோம் வாரும் – வாரும்
வணங்குவோமே

2005 நத்தார் திருப்பலி

**வருகைப் பாடல்.**

1

விடுதலை ராகங்கள்
விடியலின் கீதங்கள்
முழங்கிட வாருங்களே
புது உலகு அமைத்திட
புது வழி படைத்திட
அன்புடன் வாருங்களே – விடுதலை..

வாருங்கள் வாருங்கள்
ஆலயம் வாருங்கள்
அனைவரும் வாருங்களே
அனைவரும் வாருங்களே

அன்புக்காகவும் அமைதிக்காவும்
யேசுவே மனுவானார்
உண்மைக்காகவும் நீதிக்காகவும்
அவரே பலியானார் – அன்புக்காகவும்..
ஒன்று கூடுவோம்
உலகை ஆளுவோம் – 2
சுயநலம் நீக்கி
பிறர் நலம் காத்து
அன்பினில் நாம் இணைவோம் –
வாருங்கள்..

ஏழை எளியவர்
வாழும் இடங்களே
இறைவனின் வீடாகும்
வறுமை பிடியிலே
மலரும் விழிகளே
இறைவனின் ஒளியாகும் – ஏழை எளியவர்
பகிர்ந்து வாழுவோம்
பசியை நீக்குவோம் – 2
இறைவனின் அரசின்
இனிமையை காண
இன்றே முயன்றிடுவோம் – விடுதலை..







**தியானப் பாடல்.**

என் ஆன்மா ஆண்டவரை
ஏற்றி போற்றிடுதே
என் மீட்பராம் கடவுளையே
நினைந்து மகிழ்கின்றதே

தாழ்நிலை நின்ற அடிமைதனை
கடைக்கண் நோக்கி உயற்றிவிட்டார்
தலைமுறை யாவும் இனி என்னை
பேருடையாள் என போற்ற வைத்தாய் – என் ஆன்மா..

வல்லமை மிக்கவர் என்றுமே நல்லவர்
அருட் பெரும் செயல் புரிவார்
அவரை அஞ்சும் எழியவர் நெஞ்சம்
இரக்கத்தை ஊற்றுகிறார்
இதயத்தில் செருக்குற்ற கல்மனத்தோரை
விரட்டியே அடித்திடுவார்
அரியணை மீது அமர்ந்திடுவோரை
அகற்றிட செய்திடுவார் – இதயத்தில்..
– என் ஆன்மா..

தாழ்நிலை நின்றவர் உயர்வினை அடைவர்
பசித்தோர் நலம் பெறுவார்
செல்வர்தம் செல்வமும் செல்லரித்திடுமே
பெருமையை கண்டிடுவார்
இறைவனின் வாக்கு அழிவது இல்லை
சத்தியம் அதுதானே
அடியவர் மீது இறைவனின் இரக்கம்
நித்தியம் நிலைதானே – இறைவனின் வாக்கு
– என் ஆன்மா..







**காணிக்கைப் பாடல்.**

சின்னக் குழந்தை இயேசுவுக்கு
என்ன கொடுப்பது – நாம்
என்ன கொடுப்பது

மலரை படைத்த மழலைக்கு
மலரை கொடுப்பதா
கனியைப் படைத்த கண்மணிக்கு
கனியைக் கொடுப்பதா – சின்னக் குழந்தை

குரலை கொடுத்த குழந்தைக்கு
இசையை எழுப்பவா
விரலைக் கொடுத்த விமலனுக்கு
வீணை மீட்டவா – சின்னக் குழந்தை

